## ஒன்றிய அரசின் ஓரவஞ்சனை!

தமிழ்நாட்டில் 2021-இல் நிறுவப்பட்ட 11 மருத்துவக் கல்லூரிகளில் தலா 50 இடங்கள் வரை அதிகரிப்பதற்கு ஒப்புதல் அளிக்குமாறு, தேசிய மருத்துவ ஆணையத்திடம் (NMC) தமிழ்நாடு அரசு கோரியுள்ளது. ஆனால், கடந்த 3 ஆண்டுகளாக தமிழ்நாட்டுக் கல்லூரிகளில், மருத்துவ இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒப்புதல் தரப்படவில்லை. அதேவேளையில், மற்ற மாநிலங்களின் கல்லூரிகளில் மருத்துவப் படிப்புக்கான இடங்களை உயர்த்த தேசிய மருத்துவ ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதனால், அதிக எம்.பி.பி.எஸ். இடங்களைக் கொண்ட மாநிலங்களின் பட்டியலில், தமிழ்நாடு 12,050 எம்.பி.பி.எஸ் இடங்களைக் கொண்டு மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. கர்நாடகா (12,545 இடங்கள்) மற்றும் உத்தரப் பிரதேசம் (12,425 இடங்கள்) மாநிலங்கள் முதல் இரண்டு இடங்களைப் பிடித்துள்ளன.

அதேபோல, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவுவதை தமிழ்நாடு அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்தவகையில், புதிதாக 6 மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கான, தமிழ்நாடு அரசின் முன்மொழிவுகளை ஒன்றிய அரசு கிடப்பில் போட்டுள்ளது. அதனால், தமிழ்நாட்டின் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 77-கல்லூரிகள் என்ற நிலையில் இருந்து உயராமல் உள்ளது. உத்தரப் பிரதேசம் (86 கல்லூரிகள்) மற்றும் மகாராஷ்டிரா (80 கல்லூரிகள்) ஆகிய மாநிலங்கள் புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைக்க, அனுமதி பெற்று கல்லூரிகளின் எண்ணிக்கையை அதிகரித்து வருகின்றன.

தமிழ்நாட்டின் வலிமையான மருத்துவக் கட்டமைப்பை வளமாக வைத்திருக்க, திராவிட மாடல் அரசால் எடுக்கப்படும் முயற்சிகளை, முடக்கும் விதமாக இருக்கிறது, ஒன்றிய அரசின் இந்த ஓரவஞ்சனை!

## :ப்ளாஷ்பேக்





பி.அரி

### தலைவரிடம் அளித்த தேர்தல் நிதி!

1990-ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், ஓமலூரில் முத்தமிழறிஞர் கலைஞர் பங்கேற்ற தேர்தல் நிதியளிப்புப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது, பட்டுக் கோணம்பட்டி கிளைக் கழகச் செயலாளராக இருந்த நான், தலைவர் கலைஞர் அவர்களிடம் 1,000 ரூபாயைத் தேர்தல் நிதியாக வழங்கினேன். அந்தத் தருணத்தில் மேடையில் அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– பி.அரி, அமைப்பாளர்,**
**மாவட்ட மீனவர் அணி, தர்மபுரி மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 'விடுதலை'யை வரவேற்ற பெரியார்!

1935-ஆம் ஆண்டு ஜூலை 27-ஆம் தேதி முதல், 'விடுதலை' ஏடு நீதிக்கட்சியின் சார்பாக வாரம் இருமுறை ஏடாக வெளி வந்தது. இந்த ஏடு முதன்முதலாக வந்தபோது, 'குடி அரசு' ஏட்டில் பெரியார் வரவேற்று எழுதினார். 'இதுவரை பார்ப்பனர்களுக்கு விரோதமாக வந்த பத்திரிகைகள் எதுவும் நமது நாட்டில் வாழ்ந்ததில்லை. எவ்வளவு வீரமாக ஆரம்பித்த பத்திரிகைகள் எல்லாம் வருடாந்திரம் ஆவதற்குள், பார்ப்பனர்களுக்கு அடிமையாக வேண்டியது அல்லது மறைந்துபோக வேண்டியது என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன' என எழுதினார். பின்னர், நீதிக்கட்சியினர் 'விடுதலை'யை நடத்த முடியாமல் பெரியாரிடமே ஒப்படைத்து விட்டனர்.

# சீரணி ⟹ இளைஞர் அணி

41

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...

ஓவியம் : ரவி பேலட்



## ஊரெல்லாம் இளைஞர் அணி!

*பேரறிஞர் அண்ணாவின் சீரணி போல, முத்தமிழறிஞர் கலைஞரின் இளைஞர் அணியும் சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தது. இந்த 'இளைஞர் அணி'யில் 1,450 ஆண்கள், 150 பெண்கள் என மொத்தம் 1,600 பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற தகவலை, 1972-ஆம் ஆண்டு ஜூன் 16-ஆம் தேதியிட்ட **'தமிழரசு'** இதழ் வெளியிட்டுள்ளது. **'இளைஞர் அணி இன்னும் சிறக்கிறது'** என்று தலைப்பிட்ட அந்தச் செய்திக் குறிப்பில், மாவட்ட வாரியாகச் சேர்க்கப்படும் இளைஞர்கள் எண்ணிக்கை என்ற பட்டியலும் வெளியாகியுள்ளது. அதன்படி, சென்னை, திருச்சி, தஞ்சை, கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் ஆண்கள் 140 பேரும், பெண்கள் 15 பேரும், செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களில் முறையே ஆண்கள் 90 பேரும், பெண்கள் 10 பேரும், தர்மபுரி, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் முறையே ஆண்கள் 70 பேரும், பெண்கள் 5 பேரும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.*

*இவர்களை அந்தந்த மாவட்ட ஆட்சியர், தலைமைக் கல்வி அதிகாரி, நல்வாழ்வு அதிகாரி, மக்கள் தொடர்பு அதிகாரி ஆகியோரைக் கொண்ட குழு தேர்வு செய்தது. இவ்வாறு, கிராம சேவைத் திட்டத்திலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கி, தகுதியான குழுவைக் கொண்டு தேர்வு செய்து, ஆயிரக் கணக்கான இளைஞர்களைத் தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்காகத் தயார் செய்துகொடுத்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.*

*கலைஞர் உருவாக்கிய இளைஞர் அணித் திட்டத்தில் பங்கேற்ற, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த புதுத்தாமரைப்பட்டி இளைஞர் அணியினர், தங்களின் கிராம சேவை அனுபவங்களை, டிசம்பர் 16, 1972-ஆம் ஆண்டு தேதியிட்ட 'தமிழரசு' இதழில் பகிர்ந்து கொண்டுள்ளனர்.*

***'இளைஞர் அணியின் இலட்சியப் பணிகள்'*** *என்ற தலைப்பில் வெளியான அந்தக் கட்டுரையில்,"கிராமத்திலுள்ள பதினைந்து வயது முதல் ஐம்பது வயதுக்குட்பட்ட எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதற்காக கிராமத்திலுள்ள எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் பட்டியலைத் தயார் செய்து, அதன்படி எழுதப் படிக்கத் தெரியாதவர்களை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் கூட்டி வைத்து, 'முதியோர் கல்வி வகுப்பு'களுக்கான ஏற்பாடுகள் செய்தோம்.*

*இது, அவர்களின் சொந்த வேலைகளுக்குச் சில நேரங்களில் இடையூறாக இருந்தாலும், அவர்களிடையே இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருந்தது. கிராமத்திலுள்ள இளைஞர்களை ஒன்று சேர்த்து 'இளைஞர் மன்றம்' அமைத்து, அதன்மூலம் நாடு சிறக்க நல்ல பல பணிகள் செய்வதுதான் எங்களது அடுத்த நோக்கம்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.*

**படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டும் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 'இளைஞர் அணி'. காலத்தால் அழிக்க முடியாத வரலாற்றினைக் கொண்டுள்ளது.**

*இளைஞர் அணியின் செயல்பாடுகளில் ஒன்றாக, முப்பத்து நான்கு இளைஞர்களைக் கொண்ட ஓர் 'இளைஞர் மன்றம்' அமைத்து, அதன் மூலம் 'கிராம விளையாட்டுகள்', 'தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்', 'பொருளாதார முன்னேற்றம்' இவற்றுக்கான பணிகளைச் செய்து வந்துள்ளனர். 'பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள்', 'கிராம சுகாதாரம்' ஆகிய பணிகளையும் இளைஞர் அணியினர் செய்துள்ளனர்.*

*தவிர, விவசாய முன்னேற்றம், கால்நடை வளர்ச்சி, குடும்ப நல்வாழ்வு முதலியவற்றிற்கும் இயன்ற ஒத்துழைப்புகளை வழங்குவதும், அரசு அலுவலர்களுடன் தொடர்புகொண்டு கிராம மக்களுக்கான சேவைகளைப் பெற்றுத்தரும் பணிகளையும் இளைஞர் அணியினர் செய்துள்ளனர்.*

*படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டும் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 'இளைஞர் அணி'. காலத்தால் அழிக்க முடியாத வரலாற்றினைக் கொண்டுள்ளது. அதில் பணியாற்றி பேறு பெற்றவர்களும், பயன்பெற்ற கிராமங்களும் எத்தனையெத்தனையோ...!*

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

41

**கோவி.லெனின்**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."





## விளையாட்டுத் துறையிலும் சாதிக்கும் அரசு!

***சதுரங்கம் எனப்படும் செஸ் போட்டியில், உலக சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு 5 கோடி ரூபாயைப் பரிசாக அளித்த தமிழ்நாடு அரசு, கேரம் விளையாட்டில் 3 தங்கப் பதக்கங்கள் வென்ற காசிமாவுக்கு எதுவும் வழங்காமலும் ஒரு கோடி ரூபாய் வழங்கியும் பாரபட்சம் காட்டுவதாக குற்றம் சாட்டுகிறார்களே?***

*அதை மட்டுமா சொல்கிறார்கள்? குகேஷ் ஆந்திர மாநிலத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தெலுங்குக்காரர். அவருக்குப் பரிசு வழங்கப்பட்டதாகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்தவரான கேரம் சாம்பியன் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் வன்மத்துடன் வதந்தி பரப்பினார்கள். இந்தியாவின் சார்பில், தமிழ்நாட்டிலிருந்து கேரம் சாம்பியன் போட்டிக்குச் சென்றவர்களுக்கான செலவுத் தொகை தலா ஒன்றரை இலட்சம் ரூபாயை முழுமையாக வழங்கியதே இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரான துணை முதல்வர்தான் என்பதை காசிமாவின் அப்பா பேட்டியாகவே தெரிவித்துள்ளார்.*

*'இந்த உதவி கிடைக்காமல் போயிருந்தால், போட்டியிலேயே கலந்து கொண்டிருக்க முடியாது' என்று சாம்பியனான காசிமாவும் தெரிவித்துள்ளார். முதலமைச்சரும் துணை முதலமைச்சரும் எந்தளவுக்குத் தங்கள் மீது அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.*

*ஒவ்வொரு விளையாட்டுக்கும் தனித்தனி தன்மை உண்டு. இந்தியாவில், தேசிய விளையாட்டான ஹாக்கியும் பிற விளையாட்டுகளும் பின்தள்ளப்பட்டு, கிரிக்கெட் மட்டுமே முதன்மையானது என்ற பிம்பம் இன்றளவும் நீடிக்கும் நிலையில், பல மாநிலங்களிலும் மற்ற விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை சர்வதேச அளவில் வெளிப்படுத்தி, கவனம் பெற்று வருகிறார்கள். தமிழ்நாட்டில் கடந்த இரண்டாண்டுகளாக விளையாட்டுத் துறை மிகப்பெரிய வளர்ச்சியடைந்துள்ளது.*

*'செஸ் ஒலிம்பியாட்', 'ஹாக்கி டோர்னமென்ட்', 'கபடிப் போட்டிகள்', 'கிரிக்கெட் மேட்ச்கள்', 'மாற்றுத் திறனாளிகள் பங்கேற்கும் போட்டிகள்' என எல்லா விளையாட்டுகள் மீதும் கவனம் செலுத்தப்பட்டு, திறமையானவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். சர்வதேச அளவில் சாதனை புரிகின்ற அனைத்து விளையாட்டு வீரர்-வீராங்கனைகளுக்கும் தமிழ்நாடு அரசின் பரிசும் ஆதரவும் நிச்சயம் உண்டு. அந்த வகையில், காசிமாவுக்கும் அரசு ஒரு கோடி ரூபாய் பரிசு வழங்கி இருக்கிறது.*

*தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்தும் முதல்வர் கோப்பைப் போட்டிகளில் பல்வேறு விளையாட்டுகள் இடம்பெற்றுள்ளன. பள்ளி-கல்லூரி அளவிலும், அரசு ஊழியர்களுக்கான போட்டிகளும், பொதுமக்கள்-மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கான தனித்தனிப் போட்டிகளும் உண்டு. முதல்வர் கோப்பை மூலம் உள்ளூர் அளவில் தொடங்கி, மாவட்ட-மாநில அளவு வரை போட்டிகள் நடைபெற்று, பரிசுகள் வழங்கப்படுகின்றன. தொகுதிக்கு ஒரு விளையாட்டரங்கம் அமைக்கப்படுவதால், கிராமத்தினரும் தங்கள் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்த முடியும்.*


*இவற்றையெல்லாம்விட, வளரும் நாடுகளில் விளையாட்டுத் துறை மேம்பாடு என்பது ஒரே நாளில் சாத்தியமாகிவிடாது. ஆனால், 'எல்லாருக்கும் எல்லாம்' என செயல்படும் அரசு, விளையாட்டுத் துறைக்குச் செய்து வரும் ஊக்கத்தால், தமிழ்நாட்டு வீரர்கள் ஒவ்வொரு நாளும் சாதனை புரிந்து வருவதை காலம் சொல்லிக் கொண்டிருக்கிறது.*

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

695

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.